# தூத்துக்குடி மாநகராட்சி

## அவசரக் கூட்டப் பொருள்

**2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.**

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **28.02.2023** | 1. சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 35883/2022/EA1-SWM–, நாள் 17.02.2023. உத்திரவின்படி தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மறுசுழற்சி குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து உரமாக்கல் மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடங்களுக்கு கொண்டு வந்து ஒப்படைக்க டன் ஒன்றிக்கு ரூ.3,986.36 என நிர்ணயம் செய்து, இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி, ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.<br>இப்பணியை மேற்கொள்ள தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ.3,118.63லட்சம் செலவாகும் என்பதால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15$^{th}$CFC SBM Tied–மானிய நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்தற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்ற‌ம் அனுமதிக்கலாம்<br><br>எச்1/1379/2022 | 289) அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் |

| | | |
|---|---|---|
| | 2. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இணைக்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ரூ.137.71 கோடி மதிப்பீட்டில் AMRUT 2.0 திட்டம் 2022–2023–ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 26467/2021/AMRUT-1 நாள் 31.01.2023–ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ3/12033/2011 | 290)அலுவலகக் குறிப்பு: பதிவு செய்யலாம் |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:28.02.2023

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி